செய்தி வெளியீடு எண்: 417 நாள். 11 .06.2020.

## செய்தி வெளியீடு

**புதுப்பொலிவுடன் அமல்படுத்தப்பட்டுள்ள இணைய வழி கூட்டாண்மை நிறுவனங்கள் (Partnership Firms) பதிவு செய்யும் வசதியை பயன்படுத்த வேண்டுகோள்.**

இந்திய கூட்டாண்மை நிறுவனச் சட்டம், 1932–ன் கீழ் கூட்டாண்மை நிறுவனங்கள் மாவட்டப்பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு உரிய பதிவுச் சான்று வழங்கப்படுகிறது. இந்த கூட்டாண்மை நிறுவன பதிவு சம்மந்தமான அனைத்து நடைமுறைகளும் STAR 2.0 திட்டத்தின் மூலம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை நிறுவனத்தினர்கள் தங்கள் இருப்பிடம் / அலுவலகத்திலிருந்து இணையவழி உள்நுழைவு (Login) உருவாக்கி நிறுவனம் (Firms) பதிவிற்கான அனைத்து படிவங்களையும் பதிவேற்றம் செய்யலாம். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்கள் மாவட்டப்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் இருப்பின் அக்கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்டு மின்னனு கையொப்பம் (Digital Singnature) செய்யப்பட்ட சான்றிதழ் அவர்களின் உள்நுழைவு வழி அனுப்பப்படும். இச்சான்றிதழினை கூட்டாண்மை நிறுவனத்தினர் தங்களது உள்நுழைவு (login)–ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பதிவேற்றம் செய்யப்படும் ஆவணங்களில் ஏதும் குறைபாடு இருப்பின் அதன் விவரத்தை தெரிவித்து இணைய வழி திருப்பி அனுப்பப்படும். அக்குறைபாட்டை சரிசெய்து மீண்டும் பதிவேற்றம் செய்தால் மாவட்டப்பதிவாளரால் பரிசீலிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு மின்னனு கையொப்பமிட்ட சான்றிதழ் நிறுவனத்தினரின் உள்நுழைவிற்கு அனுப்பப்படும்.

இதன் மூலம் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்ய மாவட்டப்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை என பதிவுத்துறை தலைவர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

இதே போல் சீட்டு நிறுவனங்கள் கால முறையாக நடத்தும் சீட்டு ஏலங்கள் குறித்த ஏல நடவடிக்கை நிகழ்ச்சி நிரல் குறிப்புகள் (minutes) இணைய தளம் வழியே அனுப்பலாம். நேரில் வரவேண்டிய அவசியம் இல்லை என பதிவுத்துறை தலைவர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate ™